கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – III
– 2008/2009 (நவெம்பர்/டிசம்பர் - 2010)

LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka.

**EDUS 4104 கல்வி உளவியலின் உயர்தரக் கோட்பாடுகள்**
**(Advance theories in Educational Psychology)**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01.(அ) அறிவுசார் வளர்ச்சியில் தன்மயமாதல், தன்னமைவாதல் பற்றி பியாஜே கூறிய கருத்துக்களைத் தழுவல், திரளமைப்பு, சமநிலையின்மை, ஒழுங்கமைப்பு என்னும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் விளக்குக.
(15 புள்ளிகள்)

(ஆ) குழந்தை பிறந்த நாளில் இருந்து இரண்டு வயது வரையுள்ள காலப்பகுதியைப் பியாஜே ஆறு உபநிலைகளுக்கூடாக புலன் இயக்கப்படுவதின் செயற்பாட்டை விளக்கியுள்ளார். இக்காலப்பகுதியில் குழந்தையின் நுண்ணறிவு விருத்தியிலேற்படும் மாற்றங்களை உதாரணங்கள்மூலம் விளக்குக.
(10 புள்ளிகள்)

02.(அ) ஒரு பொருள் பற்றிய எண்ணக்கருவானது பொருட்களின் நிலைப்புத்தன்மை, பொருட்களின் அடையாளம் ஆகிய இரண்டிலும் தங்கியுள்ளது. குழந்தையில் ஒரு பொருள் பற்றிய எண்ணக்கரு எவ்வாறு வளர்ச்சியடைகின்றதென்பதை உதாரணங்களின்மூலம் எடுத்துக்காட்டுக.
(13 புள்ளிகள்)

(ஆ) அறிவுசார் வளர்ச்சி தொடர்பாக புருணர் கூறிய பொருள் பற்றிய எண்ணக்கரு விருத்தியில் செயல்நிலை (Enactive), சாயல்நிலை (Iconoic), குறியீட்டு நிலை (Symbolic) ஆகிய தன்மைகளைப்பற்றிச் சுருக்கமாக விளக்குக.
(12 புள்ளிகள்)

03.(அ) கற்றல் என்பது பல S – R இணைப்புகளை ஏற்படுத்திக்கொண்ட ஒரு ஒழுங்கமைப்பாகும். இந்த இணைப்புகள் இயக்கம், காட்சி, மனவெழுச்சி தொடர்பாக காணப்படுபவையாகும். தோண்டைக்கின் கொள்கைமூலம் வெளியிடப்பட்ட இக்கருத்துக்கள் பற்றி உமது நியாயங்களை எடுத்துரைக்க.
(10 புள்ளிகள்)

(ஆ) பல்லோவின் துலங்கல் நிபந்தனைப்பாட்டின்மூலம் உருவாக்கப்பட்ட நிபந்தனைப்பாடு தொடர்பான பின்வரும் கோட்பாடுகள் இடைநிலைப்பாடசாலையின் வகுப்பறையில் ஆசிரியரினால் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றன என்பதை உதாரணங்கள்மூலம் விளக்குக.

(i) மறைதல் - மீண்டும் தோன்றல் (Extinction – Spontaneous Recovery)

(ii) நிபந்தனைப்பாடு அழிதல் (Unconditioning)

(iii) தூண்டி – பொதுமையாக்கம் (Stimulus Generalization)

(10 புள்ளிகள்)

(இ) "ஒரு துலங்கல் வலுப்பெறுவதற்கான ஏதேனும் நிகழ்ச்சி அமையுமேயானால் அது மீளவலியுறுத்தல்" எனப்படும். ஸ்கின்னர் செய்த பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறைக் கற்பித்தலில் இதன் பிரயோகத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

04.(அ) அகக்காட்சிசார் கற்றலுக்கு பின்வரும் மூன்று நிபந்தனைகள் அவசியமென கெஸ்ரால்ட் உளவியலாளர்கள் தமது கொள்கைமூலம் வெளிக்காட்டியுள்ளனர். இந் நிபந்தனைகளுக்கூடாக எவ்வாறு கற்றல் நிகழ்கின்றதென்பதை ஆராய்க.

(i) அகக்காட்சி

(ii) இலக்கு/நோக்கம்

(iii) அமைப்பு

(09 புள்ளிகள்)

(ஆ) பிள்ளையின் நடத்தையில் கற்றல் உண்மையில் புலப்படுவது, மாதிரிக்கும் பிள்ளைக்கும் நடத்தையினால் ஏற்படும் விளைவிலேயே தங்கியுள்ளதாக அல்பேர்ட் பண்டியூரா தனது சமூகக் கற்றல் கொள்கைமூலம் வெளிக்காட்டியுள்ளார். பிள்ளை மாதிரிகளை அவதானிப்பதன்மூலம் கற்றலில் இவர் கூறிய நான்கு நிலைகளையும் விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) கக்னே (1945) கற்றல் கொள்கையைப் பயன்படுத்துவதற்கு "கற்றலின் அமைப்பு மாதிரி" ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த அமைப்பு மாதிரியிலுள்ள எட்டு கற்றல் வகைகளையும் சுருக்கமாக எடுத்துரைக்க.

(07 புள்ளிகள்)

05.(அ) "மனித தேவை ஒருவரிடம் ஆரம்பித்து அத்தேவையானது நிறைவு செய்யப்படும் வரை நடைபெறுகின்ற ஓர் உள-உடலியக்க தொழிற்பாடு ஊக்கல்" என வரையறுக்கப்படுகின்றது. இது தொடர்பான உமது கருத்துக்களை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) மானிட ஊக்கலின் மூன்றில் இரண்டு பங்குகள் நனவு நிலைக்குக்கீழ் காணப்படுகின்றதென்பதும், பெரும்பாலான மானிட நடத்தை முற்றிலும் உணராத காரணங்களினாலேயே ஊக்குவிக்கப்படுகின்றதென்பதும் சிக்மன்ட் புரொயிட்டின் கருத்தாகும். உளக்கூறுகளை அடிப்படையாக வைத்து இவரின் கருத்துக்களை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(இ) அன்பு, கணிப்பு போன்ற தேவைகள் சூழல் சார்ந்ததாக இருப்பதுடன் இதில் முதிர்ச்சியும் கற்றலும் ஒன்றாகச் சேர்ந்து செயலாற்றுகின்றன. மாஸ்லோவின் தேவைக் கொள்கையிலிருந்து விவாதத்திற்குரிய இவ்விடயத்தை சுருக்கமாக ஆராய்க.

(05 புள்ளிகள்)

06.(அ) "ஆளுமை என்பது பல நீடித்திருக்கும் பண்புகளுடன் கூடிய, தனியாள் நடத்தையில் சில பொதுவான போக்குடைய பல்வகைப்பட்ட பண்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒன்றிணைந்த கூறாகும்." இக்கூற்று பற்றி உமது தெளிவான வியாக்கியானத்தைத் தருக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஆளுமையை விளக்க சிக்மன்ட் புரோயிட் மூன்று கருத்து நிலை எண்ணக்கருக்களை முன்வைத்தார். இதனடிப்படையில் ஆளுமை விருத்தி எவ்வாறு மனிதரிடையே விருத்தியடைகின்றதென்பதை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(இ) உளவியலாளர்கள் மனிதர்களின் உடலியல் - உளவியல் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு சில வகைகளாகப் பிரித்துள்ளனர். இதில் யுங் (1961) வகுத்த அகமுகம் - புறமுகம் (Introversion - Extroversion) ஆளுமைத் தோற்றப்பாடு பற்றி விளக்குக.

(05 புள்ளிகள்)

********



LIBRARY 27 JUN 2011 ... University, Sri Lanka